(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 120.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 செத்தெம்பர் 07, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0995/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குற்றவாளியென தீர்ப்புக்கூறப்பட்ட மக்களுக்கு மன்னிப்பளிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும்;

(iii) விடுதலை செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட நியதிகளையும்;

(iv) விடுதலை செய்யப்பட்ட வேளையில் ஒவ்வொருவரும் தனது தண்டனைக் காலத்தின் எப்பகுதியை பூர்த்தி செய்திருந்தனர் என்பதையும்;

(v) கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஏதேனுமொரு அரசியல்வாதி அல்லது தொடர்புடைய நபர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1116/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருக்கையில், அதிபர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்ததன் பின்னர், அதிபர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அதிபர்கள், முன்னைய சேவையை விடக் குறைந்த சம்பளத்தைப் பெறுகிறார்கள் என்பதையும்;

(ii) மேற்படி காரணத்தினால் அவர்கள் மிகுந்த உள ரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மிகுந்த அர்ப்பணிப்புடன் பாடசாலை முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இக்குழுவினரை இதற்கு முன்னர் ஆசிரிய சேவையில் பெற்ற சம்பள மட்டத்தை விட உயர்வான சம்பள மட்டத்தில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(ii) தற்போது அதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா?

(iii) அவ்வாறின்றேல், அத்தகைய முறைமையொன்று உருவாக்கப்படும் கால எல்லை யாது?

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1161/ '11

3\. கௌரவ தயாசிறி ஜயசேகர,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி, ஆலங்குடா பிரதேசத்தில் 400 ஏக்கர்கள் அல்லது அதற்குக் கிட்டிய அளவிலான அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்காணியின் முந்திய உரித்தாளர்கள் யாவர் என்பதையும்;

(ii) இக்காணி ஏற்கனவே பகுதிகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டோ குத்தகைக்கு விடப்பட்டோ உள்ளதா என்பதையும்;

(iii) அரசாங்கத்திற்குச் சொந்தமான மேற்படி காணியை இவ்வாறு விற்பனை செய்யவோ குத்தகைக்கு விடவோ அனுமதி வழங்கிய ஆள் அல்லது ஆட்கள் யார் என்பதையும்;

(iv) இக்காணியைக் கொள்வனவு செய்த அல்லது குத்தகைக்கு பெற்றவர்களின் பெயர் மற்றும் ஒவ்வொரு ஆளுக்கும் வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே குறிப்பிட்ட காணியின் தற்போதைய நிலைமை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1256/ '11

4\. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக நீதி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகையையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1605/'11

5\. கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சோயா அவரை மற்றும் சோளம் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விஷேட கருத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) குறித்த கருத்திட்டத்துக்கு நிதி ஏற்பாடுகள் கிடைக்கும் வழிமுறை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1117/ '11

6.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பஸ்கொட குடும்ப சுகாதார சேவை நிலையக் கட்டடம் பல வருடங்ககளாக சேதமடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தை திருத்தி பிரதேச மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையினை வழங்குதவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கட்டடத்தின் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1129/ '11

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பிரதான பொருட்களையும்;

(ii) ஒவ்வொரு பொருளின் அளவு மற்றும் பெறுமதியையும்;

(iii) இப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட பிரதான நாடுகளையும்

வருடாந்த அடிப்பைடயில் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட இறக்குமதிகளை ஊக்குவிக்காதிருப்பதற்கு அரசாங்கத்தினால் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், எடுக்கப்பட்ட அந்நடவடிக்கைகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1178/ '11

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்திற்கிணங்க பிறப்பில் இருந்து ஐந்து வருடங்கள் வரையான பிள்ளைகளுக்கு பால் கொள்வனவு செய்வதற்காக மாதமொன்றுக்கு 200/- ரூபா வீதம் வழங்கும் பொருட்டு 2005 ஆம் ஆண்டில் இருந்து 2010 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் செலவிட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டாகும் போது மேற்படி நன்மைகளைப் பெறுகின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டுக்கு ஒப்பீட்டளவில் 2011 ஆம் ஆண்டாகும் போது நிலவுகின்ற பால் விலையேற்றத்துடன் மேற்படி கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1257/ '11

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1606/ '11

10.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கில் மீளக் குடியேறிய குறைந்த வருமானம் பெறுவோருக்கென விசேட கடன் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற உச்சக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1118/ '11

11.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆசிரியர் மத்திய நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் மத்திய நிலையங்களுக்காக மாவட்ட மட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிலையங்கள் மூலம் ஆற்றப்படும் சேவைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆசிரியர் மத்திய நிலையங்களுக்கு முகாமையாளர்களை ஆட்சேர்க்கும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவிகளை வகிப்பதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் மற்றும் இவர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பாக ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் பதவிகளுக்கு சில ஆசிரியர்கள் இணைக்கப் பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி பதவிக்கு தகைமைகள் அற்ற ஆட்களை இணைப்பதன் மூலம் கல்வியின் தரமிக்க அபிவிருத்தியை எய்த முடியாதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) (i) உரிய தகைமைகள் அற்ற முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய மத்திய நிலையங்களுக்கு தகைமைகள் கொண்ட முகாமையாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின் அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1133/ '11

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சாரத்தினைப் பெறும் நுகர்வோர்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) வீட்டுப் பாவனை, அரசாங்க நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், மத நிறுவனங்கள் மற்றும் ஏனையோர் எனும் வகைகளின் கீழுள்ள இ.மி. சபையின் நுகர்வோர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) மொத்த உற்பத்தியின் நூற்றுவீதமாக ஒவ்வொரு நுகர்வொரினதும் மின்சார நுகர்வினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இற்றை வரையிலான கடந்த மூன்று வருடங்களில், (அ) (ii) வகையில் அடங்கும் நுகர்வோர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்தினையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட கட்டணமாற்றங்களை ஒரு நூற்றுவீதமாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011 சனவரியிலிருந்து இற்றைவரை இ.மி.சபைக்கு ஏற்பட்ட மாதாந்த நட்டத்தினையும்;

(ii) இ.மி.சபைக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நுகர்வோர் வகையும் கொண்டிருந்த பங்களிப்பினை நூற்றுவீதமாகவும் உண்மையான பெறுமதியிலும் வெவ்வேறாகவும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1181/ '11

13.
கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தேயிலைத் தோட்டங்களில், தனியார்மயப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தோட்டங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(iii) அத்தோட்டங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தோட்டங்களை தனியார்மயப்படுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற் குறிப்பிட்டுள்ளபடி தோட்டங்களை தனியார்மயப்படுத்துதலானது மஹிந்த சிந்தனை கொள்கைகளின் கீழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறுதலாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1258/ '11

14.
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக மின்வலு, எரிசக்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1607/ '11

15.
கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாண உபாய முறையிலான சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேற்படி அறிக்கையிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற பங்களிப்பு யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 (2) (ஏ) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2009 நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1627/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 4.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 யூன் மாதம் 29 ஆந் திகதிய 1660/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.4),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிய 1589/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.5),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 1617/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.6),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய 1694/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 12.

ஊழியர் ஒய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

கடல்கடந்த ஊழியர்கள் ஒய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

ஒய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 22.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

24.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0333/ '10

1\.

கௌரவ ரவி கருணநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது தொழிற்படும் மாநகரசபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் எண்ணிக்கையையும்;

(ii) மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டு அரசாங்கத்தையும், எதிர்த்தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் களின் பெயர்கள், பிறந்த திகதி, அரசியல் கட்சி ஆகியவற்றையும்;

(iii) மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை உறுப்பினர்களுக்கு உரித்தான நன்மைகள் என்ன என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களில் தொழில் புரியும் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை என்னவென்பதையும்;

(v) அவர்களின் மாதாந்த சம்பளத்திற்கான மொத்த செலவின எவ்வளவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0841/ '10

2\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2006 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அரசாங்கம் இழந்துள்ள மொத்த தீர்வை வரி வருமானத்தின் அளவு அடிப்படையில் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2009ஆம் ஆண்டில் நான்கு வர்த்தக உடன்படிக்கைகளினால் மட்டும் அரசாங்கம் இழந்துள்ள தீர்வை வரி வருமானம் சுமார் ரூபாய் 600 கோடியாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) (i) ஆமெனில், அவ்வுடன்படிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி உடன்படிக்கைகள் காரணமாக தீர்வை வரி வருமானம் குறைவதற்கு ஏதுவான விடயங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி நிலைமைகளை தவிர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0903/ '10

3\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அலுத்கம, தர்கா நகர், தேசிய கல்வியியல் கல்லூரியில் இணைந்த விரிவுரையாளராக கடைமையாற்றுகின்ற திரு எம்.ஆர்.எம் சில்மி இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்ப்பதற்காக 2000/11/05ஆம் திகதியன்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ளாரென்பதையும்,

(ii) அனைத்து தகைமைகளையும் பூர்த்திச்செய்திருந்தும் களுத்துறை வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள அவரது பிரத்தியேக ஆவணக் கோப்பு பூரணப்படுத் தப்படாமையினாலும் உரிய விதத்தில் பராமரிக்கப்படாமையினாலும் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு இவருக்கு கிடைக்கவில்லையென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) 82/2000 ஆம் இலக்க 2000/8/24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பதவி உயர்வுக்காக பட்டதாரியான இணைந்த விரிவுரையாளரொருவர் 2000/8/24 ஆம் திகதிக்கு 5 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருப்பதன் தேவையை முதுமாணி பட்டதாரியான (M.A) திரு. சில்மி 2000 /7 /11 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், திரு. சில்மிக்கு மேற்படி பதவி உயர்வு வழங்குவதை மேலும் தாமதப்படுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) 2000/12/08 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் திரு. சில்மியை இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்த்து, அப் பதவிக்குரிய சம்பள மட்டத்தின் பிரகாரம் அனைத்து நிலுவைச் சமபளங்களையும் கொடுப்பனவுகளையும் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0585/ '10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1970 ஆம் ஆண்டு முதல் 1980 வரை, 1980 ஆம் ஆண்டு முதல் 1990 வரை, 1990 ஆம் ஆண்டு முதல் 2000 வரையிலான காலப்பகுதிகளில் பெறப்பட்ட கடன்களை வெவ்வேறாகவும்,

(ii) அவை பல்தரப்புக் கடன்களா இருதரப்புக் கடன்களா என்பதையும்;

(iii) மேற்படி கடன்களுக்கு உரித்தான வருடாந்த வட்டி வீதத்தையும், செலுத்தப்பட்ட வட்டியையும்;

(iv) அக்கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளனவா அல்லது இல்லையா என்பதையும்;

(v) மேற்படி கடன்கள் மீது வருடமொன்றுக்கு செலுத்தப்பட மொத்த வட்டியையும் முதலையும்;

(vi) இன்றுவரை பெறப்பட்ட கடன்களுக்காக 2015 முதல் 2020 வரையான (ஐந்து வருட) காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய வட்டியையும் முதலையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1131/ '11

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 10 வருடங்களுக்கான,

(i) இலங்கையின் சென்மதி நிலுவையின் தேறிய நிலைப்பாட்டையும்;

(ii) வர்த்தக நிலுவையையும்

அவர் வருடாந்த அடிப்படையில் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த 24 மாதங்களாக மாதாந்தம் வெவ்வேறாகக் காட்டப்படும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதிகளில் பிரதிபலிக்கப்படும் வர்த்தக அளவினை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?